DINAMALAR iPaper

innovative ▪ interactive

# தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் அரசுக்கு உயர் நீதிமன்றம் கேள்வி

பதிவு செய்த நாள்: நவ 03,2023 21:49

சென்னை தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக விசாரணை ஆணையம் அளித்த அறிக்கை மீது, நடவடிக்கை எடுக்காதது ஏன் என. சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. கடந்த 2018ல், தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தில், துப்பாக்கிச் குடு நடந்தது. இதில், 13 பேர் பலியாகினர்.

சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் வழக்கை விசாரணைக்கு எடுத்தது. ஆணையத்தின் புலனாய்வு பிரிவு அளித்த அறிக்கை அடிப்படையில், வழக்கை முடித்தது. இதை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில், வழக்கறிஞர் ஹென்றி டிபேன் வழக்கு தொடர்ந்தார். மீண்டும் தேசிய மனித உரிமை ஆணையம் விசாரிக்க கோரியிருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது, ஆணையத்தின் புலனாய்வு பிரிவு அளித்திருந்த அறிக்கை, சீலிடப்பட்ட உறையில் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு, நீதிபதிகள் நிஷா பானு, என் மாலா அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அறிக்கைகளை பரிசீலித்த நீதிபதிகள், தேசிய மனித உரிமை ஆணைய விசாரணை அறிக்கை மற்றும் புலனாய்வு பிரிவின் அறிக்கை அரசுக்கு கிடைத்ததா எனக் கேட்டனர். தமிழக அரசு சார்பில், அட்வகேட் ஜெனரல் சண்முகசுந்தரம் ஆஜராகி, தேசிய மனித உரிமை ஆணையத்தின் புலனாய்வு பிரிவு அறிக்கை நகல், அரசுக்கு வரவில்லை, என்றார். இதையடுத்து, வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

மனித உரிமை ஆணைய சட்டப்படி அரசுக்கும், புகார் அளித்தவர்களுக்கும் அறிக்கை வழங்கப்பட வேண்டும்: 17 அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் பரிந்துரைத்ததாகவும், அதன் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், மனுதாரர் தரப்பில் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, விசாரணை ஆணையத்தின் அறிக்கை அடிப்படையில் நடவடிக்கை எடுக்காதது ஏன் என்பதற்கு, அரசு விளக்கம் அளிக்க, நீதிபதிகள் உத்தரவிட்டனர். விசாரணையை, வரும் 17ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

https://m.dinamalar.com/detail.php?id=3473354